**TNEB**
**எம்ப்ளாயீஸ்**
**பெடரேஷன் நியூஸ்**

மலர்- 7 ✧ இதழ்-10 ✧ மே 2025

நிர்வாக ஆசிரியர்

**அ. சேக்கிழார்**

ஆசிரியர் குழு

**சு. மணிகண்டன்**
**J.L. பாஸ்டின் ராஜ்**
**K. நாராயணமூர்த்தி**
**K. செல்வராஜூ**
**R. ஜெயராமன்**
**V. சிவராணி**

செயலாளர் (வெளியீடு)

**A. செந்தில்குமார்**

தலைமை அலுவலக முகவரி :
TNEB எம்ப்ளாயீஸ்
பெடரேஷன்

39/101, சிங்கண்ணா தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னை - 600 002.

✆ : 9841446621
tnebemployeesfederation3600@gmail.com
: 9092268200
https://www.tnebfederation.org


# மே 20' வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோம்! வெற்றி பெறுவோம்!

**மே** 1 அன்று உழைக்கும் தொழிலாளி வர்க்கம் உலகம் முழுவதும் 'மே' தின தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்தி செங்கொடியேற்றி ஊர்வலம், பேரணி பொதுக் கூட்டமென சிவப்பாயிருக்கிறது உலகம்.

அண்டை நாடான இலங்கை தேசத்தில் ஜனாதிபதி உட்பட பல லட்சம் பேர் கலந்து கொண்ட ஊர்வலம் மெய்சிலிர்க்க வைத்திருக்கிறது.

தமிழகத்தில் நாம் TNEBEF கொடியும் UTUCயும் கொடியும் ஒரு சேர ஏற்றி அனைத்து மின்வட்டங்களிலும் சிறப்பாக மே தின சிறப்புகளை எடுத்துக் கூறி எதிர்கால கடமைகளையும், கோரிக்கைகளையும் மக்கள் மன்றம் முன் கொண்டு சென்றிருக்கிறோம்.

தமிழகத்தில் 25க்கு மேற்பட்ட மாவட்டங்களில் UTUC கொடி வானுயர தலைநிமிர்ந்து பட்டொளி வீசி பறந்திருக்கிறது.

மே 20 வேலை நிறுத்தப் பணிகளில் UTUC மாவட்ட கிளைகள் மத்திய தொழிற்சங்கங்களோடு இணைந்து சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருவது நெஞ்சினிக்கும் செய்தியாக உள்ளது.

பல மாவட்டங்களில் வேலை நிறுத்த ஆயத்த மாநாடு, தெருமுனை பிரச்சாரங்கள் என பம்பரமாக சுழன்று களப்பணி நடைபெற்று வருகிறது.

இடைப்பட்ட நேரத்தில் பாகிஸ்தான் பயங்கரவாதத்தால் தேசத்தின் அடுத்த கட்ட நடவடிக்கையை நோக்கியிருந்த நமக்கு ஆபரேஷன் சிந்தூர் சிறப்பாக நடைபெற்றுள்ளது. மேலும் சீறினால் முப்படைகளும் சீறிப் பாயுமென அறிய முடிகிறது.

இந்திய தேசத்தைப் பாதுகாக்கும் ராணுவத்திற்கு வாழ்த்துகளை உரித்தாக்குவோம். போரில் வீரமரணமடைந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவோம்.

மே 20 வேலை நிறுத்தத்தையொட்டி தொழிலாளர் நல ஆணையர் சமரச பேச்சுவார்த்தைக்கு 13.5.2025ல் அழைத்திருந்த நிலையில் 19.05.2025ற்கு ஒத்தி வைத்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கிறது.

என்று அழைத்தால் என்ன! என்ன பேசினால் என்ன! வேலை நிறுத்தம் என்பது உறுதி.

இப்படை தோற்கின் எப்படை வெல்லும் என்பதை உலகுக்கு உணர்த்துவோம்.

**''வரப்புயர நீர் உயரும்**
**நீர் உயர நெல் உயரும்**
**நெல் உயரக் குடி உயரும்**
**குடி உயரக் கோல் உயரும்**
**கோல் உயரக் கோன் உயர்வான்''** - **ஔவையார்**

**- ஆசிரியர்**

# வேலை நிறுத்த அறிவிப்பு படிவம்

நாள் : 02.05.2025

1958-ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகள்
விதி 59(1)-ன் கீழ்
படிவம் ''ஓ''
**(Form "O")**

## பொதுப் பயன் துறையில் வேலை நிறுத்தம் செய்வதற்காக தொழிற் சங்கத்தால் வழங்கப்படுகின்ற வேலை நிறுத்த அறிவிப்பு படிவம்

| | | |
|---|---|---|
| தொழிற்சங்கத்தின் பெயர் | : | **தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன் (Tamilnadu Electricity Board Employees Federation)** |
| வேலை நிறுத்த அறிக்கை தர தொழிலாளர்களால் அதிகாரம் பெற்றுள்ள ஏழு பிரதிநிதிகள் | | |

1. **J. லூர்து பாஸ்டின்ராஜ்** மாநில தலைவர்
2. **A. சேக்கிழார்** பொதுச்செயலாளர்
3. **N. பழனி** மாநில பொருளாளர்
4. **S. இராசாங்கம்** மாநில செயல் தலைவர்
5. **G.K. பாலகிருஷ்ணன்** மாநில அமைப்புச் செயலாளர்
6. **S. மணிகண்டன்** துணை பொதுச் செயலாளர்
7. **K. நாராயணமூர்த்தி** துணை பொதுச் செயலாளர்

| | | |
|---|---|---|
| முகவரி | : | 39/101, சிங்கண்ண தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002. |
| வேலை நிறுத்த அறிவிப்பு தரும் நாள் | : | 02.05.2025 |
| பெறுநர் (நிர்வாகம்) | : | செயலாளர்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்<br>144, அண்ணாசாலை |

ஐயா,

1947ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 22(1)ன் படி வேலை நிறுத்த அறிவிப்பினை இதன் மூலம் தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம். சட்டப்பிரிவு 22(1)ன்படி (வேலை நிறுத்தம்) **2025 மே 20ம் நாள் செவ்வாய்க்கிழமை** ஒரு நாள் **வேலை**

**நிறுத்தம் 20.05.2025 காலை 6.00 மணி முதல் 21.05.2025 காலை 6.00 மணி** வரையில் 24 மணி நேரம் நடைபெறும்.

1958ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில் விதிஎண் 59-ன் கீழ் வேலை நிறுத்தத்திற்கு தேவைப்படுகின்ற அடிப்படையான விவரங்கள் அடங்கிய பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

தங்கள் உண்மையுள்ள

**தொழிற்சங்கம் அளித்துள்ள அதிகாரத்தின்படி**
**தொழிற்சங்க ஏழு பிரதிநிதிகளின் கையொப்பம்**

1. **J. லூர்து பாஸ்டின்ராஜ்** மாநிலத் தலைவர்
2. **A. சேக்கிழார்** பொதுச்செயலாளர்
3. **N. பழனி** மாநில பொருளாளர்
4. **S. இராசாங்கம்** மாநில செயல் தலைவர்
5. **G.K. பாலகிருஷ்ணன்** மாநில அமைப்பு செயலாளர்
6. **S. மணிகண்டன்** துணை பொதுச் செயலாளர்
7. **K. நாராயணமூர்த்தி** துணை பொதுச் செயலாளர்

**பெறுநர் :**

1. **செயலாளர், தமிழ்நாடு மின்சார வாரியம்,** 800, அண்ணாசாலை, சென்னை - 600 002.
2. **செயலாளர், தொழிலாளர் துறை,** தமிழ்நாடு அரசு, சென்னை - 600 009.
3. **தொழிலாளர் ஆணையர்,** தேனாம்பேட்டை, சென்னை - 600 018.

**இணைப்பு :**

வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான கோரிக்கை பட்டியல்.

# இணைப்பு

(1958-ம் ஆண்டு தொழிற் தகராறு விதிகளில் எண் 59-ன் கீழ்)

| | | |
|---|---|---|
| **(அ) தொழிற் தகராறுகளுக்கான கட்சிக்காரர்கள்** | : | 1) தொழிலாளர் தரப்பு<br>பொதுச் செயலாளர்<br>தமிழ்நாடு எலக்டிரிசிட்டி போர்டு எம்ப்ளாயீஸ் பெடரேஷன்,<br>39/101, சிங்கண்ண தெரு,<br>சிந்தாரிப்பேட்டை,<br>சென்னை-2. |
| | : | 2) நிர்வாகத் தரப்பு<br>செயலாளர்<br>தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்<br>144, அண்ணாசாலை,<br>சென்னை-600 002. |
| **(ஆ) தொழிற் தகராறுகளின் தன்மை மற்றும் கோரிக்கைகள்** | : | கோரிக்கைகள் இணைக்கப்பட்டுள்ளது. |
| **(இ) பாதிக்கப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை** | : | இந்திய தேசத்தில் உள்ள அமைப்பு சார்ந்த, அமைப்பு சாராத தொழிலாளர்கள், விவசாயிகள், மின்சாரத் தொழிலாளர்கள் 10 லட்சத்திற்கு மேற்பட்டோர், குறிப்பாக தமிழ்நாடு மின்சார வாரியத்தில் சுமார் 90,000 மேற்பட்ட நிரந்தர தொழிலாளர்கள், பொறியாளர்கள், அலுவலர்கள் 10,000-த்திற்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் 5,000-த்திற்கும் மேற்பட்ட பகுதி நேர பணியாளர்கள் மற்றும் லட்சத்திற்கு உட்பட்ட மின்சார வாரிய ஓய்வூதியர்கள், தமிழ்நாட்டிலுள்ள சுமார் 3 கோடிக்கு மேலான மின் நுகர்வோர்கள் ஆகியோர்கள் நேரடியாக பாதிக்கப்படுகின்றனர். |
| **(ஈ) தொழில் தகராறுகளை தீர்ப்பதற்கு எடுத்து கொண்ட முயற்சிகள்** | : | 1. மத்திய அரசின் கொள்கைகளினால் 44 தொழிலாளர் நல சட்டங்களை 4 சட்ட தொகுப்புகளாக மாற்றியது, குறைந்தபட்ச |

ஊதியம் ரூ. 26,000 அளித்திடுவது, தொழிற் சங்க பதிவுகள் 45 நாட்களில் அளிப்பது, மின்சார வாரியங்கள் உட்பட அனைத்து பொதுத் துறை நிறுவனங்களில் காலியிடங் களை நிரப்பிடாமல் வேலை வாய்ப்பினை குறைப்பது, தொழிலாளர்களுக்குள்ள சலுகை களை குறைப்பது, நிரந்தரப் பணியிடங்களில் அவுட்சோர்சிங் முறையில் பணியமர்த்துவது, நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு விற்பது, அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி ஏற்றம் போன்ற பிரச்சனைகளை தீர்ப்பதற்காக தேசம் தழுவிய அளவில் மத்திய தொழிற்சங்கங்களின் அறைகூவலுக்கு இணங்க ஆர்ப்பாட்டம், பேரணி, உண்ணா விரதம் என பல கட்ட முறைகளில் மத்திய அரசின் கவனத்தை ஈர்த்து தீர்வு கண்டிட முயற்சித்ததும், வங்கி, ஆயுள் காப்பீட்டு நிறுவனம், தொலைபேசி, போக்குவரத்து மற்றும் மின்சாரம் போன்றவைகளில் பெருமளவிற்கு தனியார் முதலீடு உள்புகுந்திருப்பதையும், பழைய ஓய்வூதியம் 1.4.2003 முதல் மறுக்கப்பட்டிருப் பதையும், மின்சார சட்ட திருத்தத்தை மின்சார வாரியங்களில் அமுலுக்கு கொண்டு வர முயற்சிப்பது, ஸ்மார்ட் மீட்டர் பொருத்துவது போன்ற செயல்களை தடுத்திட தொழிற்சங்க இயக்கங்கள் தொடர்ந்து நடத்தி வந்துள்ள நிலையில், மத்திய தொழிற்சங்கங்களும் மத்திய அரசினை வலியுறுத்தி அகில இந்திய அளவில் பல்வேறு போராட்டங்களை நடத்தியதை தொடர்ந்தும் தீர்வு காணப் படாததால் 18.03.2025 மத்திய தொழிற் சங்கங்களின் கூட்டு மாநாட்டு அறிவிப்பின்படி 2025 மே 20ம் நாள் செவ்வாய்க்கிழமை ஒரு நாள் 24 மணி நேர வேலை நிறுத்தத்தை முன் நிறுத்துகிறோம்.

**பொதுச் செயலாளர்**

## கோரிக்கைகள்

**1958ம் ஆண்டின் தமிழ்நாடு தொழிற்தகராறு விதிகளில், விதி 59ன் கீழ் தொழிற்சங்கம் நடத்தவுள்ள வேலை நிறுத்தத்திற்கு அடிப்படையான கோரிக்கைகள் அடங்கிய விபரப் பட்டியல்**

௦௧. தொழிலாளர் நல சட்டங்கள் ௪௪ஐ நான்கு சட்ட தொகுப்புகளாக மாற்றியதை திரும்ப பெற வேண்டும்.

௦௨. அத்தியாவசிய பொருள்களின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும்.

௦௩. கல்வி, சுகாதாரம், தண்ணீர் போன்ற அடிப்படையானவைகளை தனியார் மயமாக்குதலை நிறுத்திடல் வேண்டும்.

௦௪. சமவேலைக்கு சம ஊதியம் வழங்க குறைந்தபட்ச ஊதியம் 26,000/- நிர்ணயித்திடல் வேண்டும்.

௦௫. தமிழ்நாடு மின்சார வாரியம் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிட வேண்டும்.

௦௬. அதிக விலைக்கு தனியாரிடம் மின் கொள்முதல் செய்வதை கைவிடல் வேண்டும்.

௦௭. மின்சார வாரியம் உட்பட அனைத்து பொதுத்துறைகளிலும் உள்ள காலி இடங்களையும் நிரப்பிட வேண்டும். பணியிடங்கள் அனைத்திலும் நிரந்தர தொழிலாளர்களே பணி செய்திட வேண்டும்.

௦௮. மின் விநியோகம், உற்பத்தி போன்றவைகளில் தனியாருக்கு தந்துள்ள அனுமதி மற்றும் உரிமத்தை அனைத்து மாநிலங்களிலும் ரத்து செய்திட வேண்டும்.

௦௯. தனியார் மயப்படுத்துவதற்காக மின் விநியோகத்தையும், உற்பத்தியையும் தனியாரிடம் தாரை வார்ப்பதை நிறுத்த வேண்டும்.

௧௦. மின்சார சட்டம் 2003ன் தொடர்ச்சியாக வரும் மின்சார சட்ட திருத்தத்தை கைவிட வேண்டும்.

௧௧. பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்று தனியார் மயமாக்குவதை நிறுத்திடல் வேண்டும்.

௧௨. புதிய பென்சன் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த பென்சன் திட்டங்களை ரத்து செய்து பழைய ஓய்வூதியமே தொடர வேண்டும்.

௧௩. 10,000க்கு மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் தொடர்ந்து பணி செய்து வருகிறார். தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தரம் செய்திட வேண்டும். 1000 அலுவலகங்களுக்கு மேல் பகுதி நேரப் பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. ஊதியமின்றி பணி செய்து கொண்டிருப்பவர்களை நிரந்தரம் செய்திடல் வேண்டும்.

௧௪. காலியிடங்கள் Field Assistant, Technical Assistant, Assessor, Junior Assistant, Assistant Engineer, Assistant Draughtsman ஆகிய பதவிகள் சுமார் 56,000 காலியிடங்களை நிரப்பிடல் வேண்டும்.

௧௫. 1.12.2019 முதல் வழங்க வேண்டிய ஊதிய உயர்வுக்கான 16.05.2023 ஒப்பந்தத்தில் 6% ஊதிய உயர்வு மறுக்கப்பட்ட 12,000 தொழிலாளர்களுக்கு வழங்கிடல் வேண்டும்.

௧௬. BP2ஐ முழுமையாக ரத்து செய்திட வேண்டும்.

- பொதுச் செயலாளர்




# உடுமலையில் மே தின விழா

**01.**05.2025 அன்று காலை 9.30 மணியளவில் உடுமலை மின்விநியோக வட்ட மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகம் முன்பாக, TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷனின் கொடியை, த.நா.மி.வா ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்க மாநில அமைப்புச் செயலாளர் திரு. S. ராஜசேகரன் ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து நாம் இணைந்துள்ள UTUC அமைப்பின் கொடியை மாநில உபதலைவர் திரு. உடுமலை சக்திவேலு ஏற்றி வந்தார்.

தொடர்ந்து சங்க மனையில் நடைபெற்ற கூட்டத்துக்கு ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்க உடுமலை வட்டத் தலைவர் திரு. உரல்பட்டி சுப்பிரமணியம் தலைமை தாங்கி மே தின விழா சிறப்பு பற்றி விளக்கினார்.

திரு. S. ராஜசேகரன், திரு. மயில்சாமி ஆகியோரது உரையை தொடர்ந்து, உடுமலை வட்ட எம்ப்ளாயீஸ் பெடரேஷன் வட்டத் தலைவர் திரு. P. ஆறுச்சாமி அவர்களது உரையில் மே 20ல் நடைபெற உள்ள வேலை நிறுத்தத்துக்கான ஆயத்தக் கூட்டமாக இந்த மே தினம் அமைந்துள்ளது என விளக்கினார்.

உடுமலை ம.சா.எ.ச.ஆ. வட்ட செயலாளரும் மாநில செயலாளருமான திரு. துரைராஜ், உடுமலை வட்டச் செயலாளர் திரு. S. மோகன் ஆகியோர் மே மற்றும் ஜூன் மாதங்களில் நடைபெற உள்ள போராட்டங்களில் நமது ஒற்றுமை சக்தியைக் காட்டி வெற்றி பெற வேண்டினார்கள்.

PAP வட்டத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று மறைந்த திரு. (பொட்டு) சுப்பிரமணியம் அவர்களது மகனால் உடுமலை கிளைக்கு வழங்கப்பட்ட 1957 முதலான ஆவணங்களை மாநில உபதலைவர் சக்திவேலு பெற்றுக் கொண்டு, அவருக்கு சால்வை அணிவித்துப் பாராட்டி, மே தினம் மற்றும் UTUC அமைப்பின் சிறப்புகளை விளக்கி, நமது எம்ப்ளாயீஸ் பெடரேஷன் எடுத்துள்ள வேளை நிறுத்த அறிவிப்புகளின் மீது தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டினார்.

மே தின கொடியேற்று விழாவுக்காகவும், குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்து UTUC கொடியை ஏற்றிட செயல்பட்ட உடுமலை வட்ட செயல்தலைவர் திரு. வெள்ளியங்கிரி உடுமலை கோட்டத் தலைவர், திரு. N. வேலுச்சாமி கோட்ட செயலாளர் திரு. கங்காதரன், உபதலைவர் திரு. K. சக்திவேல் ஆகியோரையும் பாராட்டி வாழ்த்தி இனி வருங்காலங்களிலும் சிறப்பாகச் செயல்பட வேண்டுமென மாநில உபதலைவர் சக்திவேலு வேண்டினார்.

முடிவில் ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்க மாநில இணைச் செயலாளர் திரு. கோதண்டன் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிவு பெற்றது.

**- உடுமலை,** *வட்டச் செயலாளர்*







## TNEBREOS
## திருநெல்வேலி கிளை

திருநெல்வேலி ஓய்வு பெற்ற தொழிலாளர் மற்றும் அலுவலர் சங்கம் சார்பில் ''மே'' தின கொடியேற்றும் விழா கிளையின் செயலாளர் K. சிவசுப்புபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

UTUC சங்க கொடியை மாநில உபதலைவர் திரு. N. முத்தையா அவர்கள் ஏற்றினார்கள்.

TNEBEF சங்க கொடியை கிளையின் இணைச் செயலாளர் திரு. S. மீனாட்சி சுந்தரம் அவர்கள் ஏற்றி உரையாற்றினார்கள்.

இறுதியில் கிளையின் (REOS) இணைச் செயலாளர் திரு. N. கிருஷ்ணமூர்த்தி நன்றி உரையாற்றினார்.

## செங்கற்பட்டு கிளை

இன்று 01.05.2025 அச்சரப்பாக்கம் செயற்பொறியாளர் அலுவலக வாயிலில் நமது இரட்டை கோபுர ''செங்கொடி'' நமது வட்ட மகளிரணி செயலாளர் திருமதி S. சுகுணவள்ளி அவர்கள் ஏற்றி வைத்தார்கள். UTUC கொடியை தமிழ்நாடு ரேஷன் கடை ஊழியர்கள் சங்க மாநில துணை தலைவர் திரு. ம. சங்கர் அவர்கள் ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நமது சங்க மாநில இணை செயலாளர் திரு. கி. தயாநிதி அவர்கள் மற்றும் செங்கை திட்ட செயலாளர் கி. கருணாகரன் அவர்கள் மே தின சிறப்புரை ஆற்றினார்கள் மற்றும் திரு. D. சீனிவாசன் செங்கை திட்ட பொருளாளர் அவர்கள் நன்றி உரையுடன் மே தின கொடியேற்ற நிகழ்ச்சி நிறைவுற்றது.






அடுத்து மதுராந்தகத்தில் ரேஷன் கடை மண்டல அலுவலகத்தில் ரேஷன் கடை ஊழியர்கள் சங்க மே ‘‘தின கொடியேற்றிய நிகழ்வில் நமது சங்க பொருப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்திய நிகழ்வு.

**- கி. கருணாகரன்,** திட்ட செயலாளர்
செங்கற்பட்டு

## நாமக்கல் மின் பகிர்மான வட்ட கிளை



நாமக்கல் மாவட்டத்தில் மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு மாவட்ட UTUC சார்பாக நாமக்கல் பரமத்தி சாலையில் 110/122 KV நாமக்கல் துணை மின்நிலைய வளாகத்தில் காலை 9.15 மணிக்கு TNEBEF தொழிற்சங்க திட்ட செயலாளர் திரு. ப. சசிகுமார் அவர்கள் தலைமை தாங்கிட UTUC-ன் நாமக்கல் மாவட்ட செயலாளர் திரு. V. பழனிசாமி அவர்கள் UTUC-ன் செங்கொடியை ஏற்றி வைத்து மத்திய அரசின் தொழிலாளர் விரோத போக்கினை கண்டித்தும் விலைவாசி உயர்வு, வேலைவாய்ப்பை குறித்துப் பேசினார். மேலும் மத்திய, மாநில அரசினை கண்டித்து திரு. மு. தண்டபாணி, TNEBEF கரூர் மண்டல செயலாளர் அவர்கள் ஒலிமுழக்கம் இட நாமக்கல் திட்ட TNEBEF பொருளாளர் சிறப்புரையாற்றிட திட்ட அமைப்பு செயலாளர் திரு. சுப்ரமணியன் அவர்கள் நன்றியுரை கூறினார். இந்நிகழ்வில் நாமக்கல் மாவட்ட மின்வாரிய TNEBEF தொழிற்சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதுடன் தொட்டிப்பட்டி ஊராட்சியை நாமக்கல் மாநகராட்சியுடன் இணைத்ததால் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தில் வேலை இழந்த பெண்கள் 10க்கும் மேற்பட்டோர் அவர்களது குடும்பத்துடன் கலந்து கொண்டு மத்திய அரசுக்கு எதிராக UTUC உடன் இணைந்து கோஷமிட்டு தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். இந்நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட உறுதுணையாக இருந்த நாமக்கல் TNEBEF தொழிற்சங்க திட்ட துணை தலைவர் திரு. ராமன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.



## நாமக்கல் மின் பகிர்மான வட்ட கிளை





நாமக்கல் மின்திட்டத்தில் மே-1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ப.வேலூர் கோட்ட அலுவலகத்தின் முன்பாக காலை 10.00 மணிக்கு திட்ட செயல்தலைவர் திரு. மு. தண்டபாணி அவர்கள் தலைமை தாங்கிட ப. வேலூர் காட்ட செயலாளர் திரு. வையாபுரி அவர்கள் நமது TNEBEFன் இரட்டை கோபுரம் கொண்ட செங்கொடியினை ஏற்றி வைத்திட திட்டத் தலைவர் திரு. V. பழனிசாமி, திட்ட செயலாளர் திரு. ப. சசிகுமார் மே தின சிறப்புரையாற்றிட 20க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர் நிறைவாக அமைப்பு செயலாளர் திரு. சுப்ரமணியன் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

மேலும் நாமக்கல் கிளையில் மோகனூர் உபகோட்ட அலுவலகம் முன்பாக மோகனூர் நகர் பிரிவு பிரதிநிதி திரு. தேவராஜ் அவர்களும் எலச்சிபாளையம் உபகோட்ட அலுவலகம் முன்பாக திட்ட பொருளாளர் திரு. P. சக்திவேல் அவர்கள் கொடியை ஏற்றி வைத்தும் திருச்செங்கோடு கோட்ட தலைவர் திரு. V. முருகேசன் அவர்கள் பள்ளி மாணவர்களுக்கு எழுது பொருட்கள் வழங்கியும் மே தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

## திருச்சி மாவட்ட ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் கொடியேற்று விழா





ஒன்றுபடுவோம்! போராடுவோம்!! வெற்றி பெறுவோம்!!!

உலகில் எங்கெல்லாம் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அநீதி நடக்கிறதோ அங்கெல்லாம் எனது கால்கள் பயணிக்கும்.

**- சேகுவாரா**

மே தினம் உலகத்தில் உள்ள உழைக்கும் வர்க்கம் அனைவரும் கொண்டாடும் ஒரே திருநாள மே தினம்.

ஜாதி, மதம், இனம், மொழி கடந்து உழைக்கும் வர்க்கத்தின் உன்னத திருநாள் மே தினம்.

எத்தனையோ தலைவர்கள் ரத்தம் சிந்தி பாடுபட்டு கிடைத்த வெற்றி தான் மே தினம்.

இனிவரும் காலங்களில் கொண்டாட்டப்படுமா மே தினம் என்பதே கேள்வி குறிதான் முதலாளிகளின் ஆளுமைத்தனம், ஆளும் வர்க்கத்தின் அதிகார பலம், ஆணவப்போக்கு இவற்றையெல்லாம் முறியடிக்க தொழிலாளர்களே ஒன்று கூடுவோம்! வாரீர்! வாரீர்!

இனி ஒரு விதி செய்வோம்.

**- திருச்சி மாவட்ட UTUC**

## மதுரை மாவட்ட UTUC கொடியேற்று விழா









## திருநெல்வேலி கிளை மே தின கொடியேற்று விழா








**01**.05.2025 காலை 10.30 மணிக்கு மே தின கொடியேற்று விழா திருநெல்வேலி மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு திருநெல்வேலி UTUC மாவட்ட செயலாளர் திரு. S. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் TNEBEF மாநில உபதலைவர் திரு. N. முத்தையா அவர்கள் UTUC கொடியேற்றி சிறப்புரை ஆற்றினார். UTUC கொடியேற்று விழாவில் தென்காசி UTUC மாவட்ட செயலாளர் திரு. V. பாலசுப்ரமணியன், TNEBEF திட்ட பொருளாளர் திரு. L.K. ரெங்கநாதன் மற்றும் கோட்ட பொருப்பாளர்கள் உறுப்பினர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

## சென்னை தெற்கு - I கிளை

வணக்கம், TNEBEF சென்னை தெற்கு -I திட்டத்தின் சார்பாக, தொழிலாளர் தினமான மே-1 அன்று, சென்னை தெற்கு-1 திட்டத்தில், கிண்டி கோட்டத்தில் உ.பொ/சிகப்/கிண்டி பிரிவில் புதியதாக கொடிகம்பம் அமைக்கப் பெற்று, திட்டத் தலைவர் தோழர் J. கோபி அவர்கள் தலைமையில் மே தின கொடியேற்று விழா சிறப்பாக நடைபெற்றது. அதில் திட்டச் செயலாளர் K.J. பிரசாத், பொருளாளர் M. முருகேசன், செயல்தலைவர் K. சீனிவாசன், இணைச்செயலாளர்கள் B.R. கண்ணன் மற்றும் D. விஜயகுமார், கிண்டி கோட்டச் செயலாளர் பாலாஜி ராவ், போரூர் கோட்ட செயலாளர் கணேசன் மற்றும் சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.





## குளித்தலையில் UTUC கொடியேற்று விழா



01.05.2025 மே தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்டம் குளித்ததலையில் UTUC கொடியை மாவட்டப் பொறுப் பாளர் திரு. L. முருகவேல் அவர்களால் ஏற்றி வைக்கப் பட்டது. அதுசமயம் திரு. P.V. ராஜலிங்கம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற் றினார். அதில் மத்திய அரசின் 44 தொழிலாளர் நலசட்டங்கள் 4 கட்டங்களாக மாற்றும் முடிவு அதனால் தொழிலாளர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் மற்றும் மின்துறையை தனியாருக்கு கொடுத்தால் ஏற்படும் பின்விளைவுகள், Smart Meeter பொருத்தினால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் பேசினர். இதில் திரு. P. வீரமணி, P. பெரியசாமி, S. ஜெயபால், சரவணன், S.P. அப்பாவு, S. ரமேஷ்பாபு, M. சாமிநாதன், M. கோபாலகிருஷ்ணன், P. தங்கராஜ் உட்பட 35-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## கரூர் கிளையின் மே தின கொடியேற்று விழா



01.05.2025 அன்று மே தினத்தை முன்னிட்டு கரூர் மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக நமது TNEB Employees Federation கொடியை கிளையின் செயலாளர் திரு. L. முருகவேல் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. அச்சமயம் நமது பொறுப்பாளர்கள் திரு. P. பெரியசாமி, S. சண்முகம், G. ரமேஷ், S. ஜெயபால், S. மதனகோபால், P.S. தங்கவேல், K. நடராஜன் உட்பட உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். அதனைத் தொடர்ந்து குளித்தலை கோட்டத்திற்குட்பட்ட அய்யர்மலை உபகோட்ட அலுவலகம் மற்றும் துணை மின்நிலையம் முன்பாக நமது TNEB Employees Federation கொடியை மாநில உபதலைவர் திரு. P.V. ராஜலிங்கம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. அப்பொழுது நமது பொறுப்பாளர்கள் திரு. L. முருகவேல், திரு. P. வீரமணி, P. பெரியசாமி, S.P. அப்பாவு, S. ரமேஷ்பாபு, S. ஜெயபால், M. சாமிநாதன், M. கோபாலகிருஷ்ணன், P. தங்கராஜ் உட்பட உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.







## மின்வாரியத்தில் காலிப்பணியிடங்களை நிரப்பக்கோரி 20-ந் தேதி வேலை நிறுத்தம்

விருதுநகரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்த ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் மாநில பொதுச் செயலாளர் சேக்கிழார் கூறியதாவது:-

பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கும் நிலை உள்ளது. காலிப்பணி யிடங்களை நிரப்பாமல் குறைந்த ஊதியத்தில் அதிக வேலை வாங்கும் நிலை மத்திய, மாநில அரசுகளில் உள்ளது. மின்சார வாரியத்தில் சுமார் 60 ஆயிரம் காலிப்பணியிடங்கள் உள்ளன. 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழி லாளர்கள் நிரந்தர பணியிடத்திற்காக காத்திருக் கின்றனர். 5 ஆயிரம் கேங்மேன் காத்திருக் கிறார்கள். மத்திய அரசின் ஒருங்கிணைந்த பென்ஷன் திட்டத்தை எதிர்க்கிறோம். இதனை எதிர்த்து நாடு முழுவதும் வருகிற 20-ந் தேதி ஒருங்கிணைந்த தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தம் நடைபெறும். மேலும் நாடு முபவதும் உள்ள 15 லட்சத்திற்கும் மேற்பட்ட மின்தொழிலாளர்கள் மின்விநியோகத்தை தனியார் மயமாக்குவதை எதிர்த்து வருகிற ஜூன் மாதம் 26-ந் தேதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர். இவ்வாறு அவர் பேட்டி அளித்தார். பேட்டியின் போது நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

## மே தின பேரணி







**வி**ருதுநகர் மீனாம்பிகை பங்களா பேருந்து நிறுத்தத்தில் இருந்து மாவட்ட மைய நூலகம் வரை ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் சார்பில் மே தின விழா பேரணி நிறைவேற்றது. பேரணிக்கு மாவட்ட செயலாளர் இளங்கோவன் தலைமை தாங்கினார். தமிழ்நாடு பொதுச்செயலாளர் சேக்கிழார் சிறப்புரையாற்றினார்.

மாவட்ட செயலாளர் ராதாகிருஷ்ணன், மாவட்ட தலைவர் மாரிமுத்து முன்னிலை வகித்தனர். பொருளாளர் பாலசுப்ரமணியன் வரவேற்றார். பேரணியில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். சிலிண்டர் விலை உயர்வை ரத்து செய்ய வேண்டும். 44 தொழிலாளர் நலச் சட்டங்களை 4 தொகுப்புகளாக குறைத்ததை ரத்து செய்ய வேண்டும். பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்குவதை கைவிட வேண்டும். காலிப்பணியிடங்களை நிரப்ப வேண்டும், புதிய பென்ஷன் திட்டத்தை ரத்து செய்து பழைய பென்ஷன் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் உள்ளிட்ட 10 அம்சக் கோரிக்கைகள் பேரணியில் வலியுறுத்தப்பட்டன.

## விருதுநகர் மாவட்டத்தில் மே தின கொண்டாட்டம் - பத்திரிகை செய்தி

**வி**ருதுநகரில் பல்வேறு தொழிற்சங்கங்களின் சார்பில் மே தின கொண்டாட்டம் நடந்தது. அனைத்து தொழிற்சங்க கூட்டமைப்பு (ஜே.சி.டி.யு.,) சி.ஐ.டி.யு., சார்பில் மதுரை ரோடு ஸ்டேட் வங்கி முன்பு துவங்கி தேச பந்து மைதானம் வரை மே தின ஊர்வலம் நடந்தது. சி.ஐ.டி.யு., மாவட்ட துணைத் தலைவர் வேலுச்சாமி தலைமை வகித்தார். போக்குவரத்து பிரிவு பொதுச் செயலாளர் வெள்ளைத்துரை உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

கைவண்டி, மாட்டு வண்டி, லாரி சுமை ஏற்றுமதி, இறக்குமதி தொழிலாளர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் நடந்த ஊர்வலத்தில் தலைவர் டேவிட் தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பிச்சைக்கனி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். **ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் (யு.டி.யுசி.,) சார்பில் நடந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர் இளங்கோவன் தலைமை வகித்தார்.**

- ★ ராஜபாளையத்தில் ஏ.ஐ.டி.யு.சி., அமைப்புச் செயலாளர் ரவி தலைமை வகித்தார். சி.ஐ.டி.யு., சார்பில் மாவட்ட செயலாளர் கணேசன் தலைமை வ கித்தார். மாநில உதவி தலைவர் ராஜேந்திரன் துவக்கி வைத்தார். ஊர்வலம் பஞ்சு மார்க்கெட் தொடங்கி ஜவஹர் மைதானத்தில் முடிந்தது.
- ★ சிவகாசியில் தமிழ்நாடு காலண்டர் உற்பத்தியாளர்கள் சங்கம், முகநூல் ஒருங்கிணைப்பு குழு சார்பில் சாட்சியாபுரம் ரயில்வே மேம்பாலம் பணியில் ஈடுபட்டுள்ள வடமாநில தொழிலாளர்களுடன் மே தினம் கொண்டாடப்பட்டது.

அசோகன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு காலண்டர் உற்பத்தியாளர் சங்கம் தலைவர் தியாகராஜ் செயலாளர் ஜெய்சங்கர் தலைமை வகித்தனர்.

## UTUC தூத்துக்குடி மாவட்டம் மே தின கொடியேற்றம்

**மே** தினத்தன்று (01.05.2025) தூத்துக்குடி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலக நுழைவு வாயில் முன்பிருந்து சுமார் 50க்கும் மேற்பட்டோர் ஊர்வலமாக புறப்பட்டு, UTUC பதாகை மற்றும் கொடி பிடித்து மே தின கோஷங்களோடு நமது TNEBEF சங்க அலுவலகம் அடைந்து, தூத்துக்குடி மாவட்ட UTUC செயலாளர் தோழர் N.D.S. அலெக்சாண்டர் அவர்களால் UTUC கொடியேற்றப்பட்டு, மே தின உரை நிகழ்த்தப்பட்டது. சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக மே தின கூட்டம் நடைபெற்றது. TNEBEFன் திட்டத் தலைவர் தோழர் S. சரவணன், திட்டப் பொருளாளர் தோழர் K. ஜெயச்சந்திரன் உட்பட பலர் மே தினம் குறித்து உரையாற்றினர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டு கூட்டம் இனிதே நிறைவுற்றது.





## TNEBEF தூத்துக்குடி மின்பகிர்மான வட்டக் கிளை மே தின கொடியேற்றம்





**மே** தினத்தன்று (01.05.2025) தூத்துக்குடி மின் பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பு நமது TNEBEF கொடி திட்டத் தலைவர் தோழர் S. சரவணன் அவர்களால் ஏற்றப்பட்டது. திட்டச் செயலாளர் தோழர் N.D.S. அலெக்சாண்டர், திட்டப் பொருளாளர் தோழர் K. ஜெயச்சந்திரன் உட்பட திட்ட கோட்ட நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் என 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், பொதுக் கோட்டத்தில் 230 கிவோ துணை மின்நிலையம்/ முத்தையாபுரம் அலுவலகம் முன்பு நமது TNEBEF கொடி திட்டப் பொருளாளர் தோழர் K. ஜெயச்சந்திரன் அவர்களால் ஏற்றப்பட்டது. திட்ட செயலாளர் தோழர் N.D.S. அலெக்சாண்டர், பொதுக்கோட்ட தலைவர் தோழர் செல்வம் பொன்ராஜ், செயலாளர், பாஞ்சாலன் மற்றும் தோழர் முருகேசன், தோழர் சதீஸ்குமார் உட்பட 20க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

ஊரக கோட்டச் செயலாளர் தோழர் சேதுராமன் அவர்கள் சூரன்குடி துணைமின் நிலையம் மற்றும் பிரிவு அலுவலகம் முன்பு கொடியேற்றி சிறப்பித்துள்ளார். விளாத்திகுளம், புதூர் பிரிவுகளிலும் நமது சங்க கொடியேற்றப்பட்டது.

## சென்னை மின்பகிர்மான வட்டம் / வடக்கு



சென்னை மின்திட்டம் / வடக்கு கிளை சார்பாக மே தின கொடி ஏற்று விழா 01.05.2025 அன்று கீழ்கண்ட இடங்களில் சிறப்பாக நடந்தேறியது.

1) 230 KV கும்மிடிபூண்டி துணை மின்நிலைய வாயிலில் திட்ட செயல் தலைவர் திரு. G. ஸ்டாலின் அவர்கள் கொடியேற்றி சிறப்பித்தார். உடன் பிரிவு உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

2) பொன்னேரி கோட்டம் / கும்மிடிபூண்டி துணை மின்நிலைய வளாக வாயிலில் சங்க மூத்த உறுப்பினர் திரு. R. ராஜேந்திரன் அவர்கள் கொடி ஏற்றி சிறப்பித்தனர். உடன் நிர்வாகிகள் மற்றும் பிரிவு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

3) சிப்காட் I மற்றும் II பிரிவு வளாக வாயிலில் சங்க திட்ட துணைத் தலைவர் திரு. V. பாஸ்கரன் அவர்கள் சங்க கொடியேற்றி சிறப்பித்தார். உடன் நிர்வாகிகள் மற்றும் பிரிவு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



4) பொன்னேரி மேற்கு பிரிவு வாயிலில் சங்க பொன்னேரி கோட்ட செயலாளர் திரு. R. கிருபாகரன் அவர்கள் கொடி ஏற்றி சிறப்பித்தார். உடன் பிரிவு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

5) பொன்னேரி கோட்டம் / துரைநல்லூர் 110 KV துணை மின்நிலைய வளாக வாயிலில் சங்க மூத்த உறுப்பினர் திரு. E. மொராஜி அவர்கள் சங்க கொடியேற்றி சிறப்பித்தார் உடன் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

6) தண்டையார்பேட்டை கோட்டம் / மணலி புதுநகர் பிரிவு அலுவலக வாயிலில் சங்க கொடியினை த.பேட்டை கோட்ட செயலாளர் திரு. A. பாலாஜி அவர்கள் ஏற்றி சிறப்பித்தார். உடன் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

7) பொன்னேரி கோட்டம் / எளாவூர் பிரிவு அலுவலகத்தில் திட்ட துணைத் தலைவர் திரு. V. பாஸ்கரன் அவர்கள் கொடியேற்றி சிறப்பித்தார். உடன் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**02.05.2025**

8) மீஞ்சூர் பிரிவுகள் மற்றும் உபகோட்ட வளாக வாயிலில் சங்க கொடியினை கோட்ட செயலாளர் திரு. E. பாலாஜி அவர்கள் ஏற்றி சிறப்பித்தார்.

9) பொன்னேரி கோட்டம் / பழவேற்காடு பிரிவு அலுவலக வாயிலில் சங்க கொடியினை பொன்னேரி கோட்ட அமைப்பு செயலாளர் திரு. S. பக்கிரிசாமி அவர்கள் ஏற்றி சிறப்பித்தார்.

10) பெரம்பூர் கோட்டம்/ IPL துணை மின்நிலைய வளாக வாயிலில் சங்க கொடியினை திட்ட தலைவர் திரு. E. ஜெய்கணேஷ் அவர்கள் ஏற்றி சிறப்பித்தார்.

11) பெரம்பூர் கோட்டம்/ நேர்மை நகர் துணை மின்நிலைய வளாக வாயிலில் கோட்ட செயலாளர் திரு. A. லட்சுமணன் அவர்கள் சங்க கொடிஏற்றி சிறப்பித்தார்கள்.

# மே தின கொடி ஏற்றும் / கோவை





## UTUC கொடி கோவை மாவட்டம்

**கோவை 230 KV SS / நுழைவாயில் முன்பு**

தலைமை :

**திரு. A. முருகவேல்,**
மண்டல செயலாளர்

முன்னிலை :

**திருமதி. M. பாரதி,**
மாநில செயலாளர்

கொடி ஏற்றி மே தின சிறப்புரை :

**திரு. A. கண்ணாதுரை,**
மாநில உபதலைவர்




**மின்வாரிய தலைமைப் பொறியாளர் அலுவலகம் / பிரதான நுழைவு வாயில் முன்பு**

தலைமை :

**திரு. I. லியோபால்,**
செயலாளர், கோவை/தெற்கு

முன்னிலை :

**திருமதி. K.P. ஸ்ரீனிவாசன்**
மாநில இணைச் செயலாளர், கோவை/ மாநகர்

கொடி ஏற்றுதல் :

**திரு. A. முருகவேல்**
மண்டல செயலாளர்





**கோவை GCC வட்டம்**



தலைமை :

**திரு. P. நாகராஜ்**
மாநில இணைச் செயலாளர்

முன்னிலை :

**திரு. A. ரவிக்குமார்,** பொருளாளர் / GCC

கொடி ஏற்றுதல் :

**திரு. M. ராஜேந்திரன்**
செயலாளர் / GCC மாநில இணைச்செயலாளர்

கோவை மாநகர் வட்டத்தில் 14 இடங்களில் மே தின கொடி ஏற்றப்பட்டது.

---

**கோவை மாநகர் - மையக் கோட்டம் 110/11 KV R.S. புரம் துணை மின்நிலையம்**

**திரு. K.P. ஸ்ரீனிவாசன்**
வட்டசெயலாளர்/ மாநில இணைச் செயலாளர்








**கோவை மாநகர் - ஒண்டி புதூர் கோட்டம்**

| | | |
|---|---|---|
| செயற்பொறியாளர் அலுவலகம் / ஒண்டி புதூர் | : | **திரு. K. கோவிந்தராஜீ,** அமைப்பு செயலாளர் |
| 110/11 KV கானப்பட்டி துணை மின்நிலையம் | : | **திரு. A. முருகவேல்,** வட்டத் தலைவர் |
| சின்னியம்பாளையம் - மேற்கு பிரிவு | : | **திரு. K. திருமூர்த்தி,** துணைச் செயலாளர் |
| சின்னியம்பாளையம் - கிழக்கு பிரிவு | : | **திரு. A. கிருஷ்ணன் குட்டி,** உதவி செயலாளர் |
| சின்னியம்பாளையம் - வடக்கு பிரிவு | : | **திரு. P. சதீஷ்குமார்,** உதவி செயலாளர் |

**கோவை மாநகர் - நகரிய கோட்டம்**

| | | |
|---|---|---|
| சாய்பாபா காலனி பிரிவு | : | **திருமதி. M. கவிதா,** மாநில இணைச் செயலாளர் |
| இடையர்பாளையம் பிரிவு | : | **திருமதி. L. லீமா ரோஸ்லின்**<br>மத்திய அலுவலகம் & MRT கோட்ட தலைவர் |
| 110/11 KV பீளமேடு து.மின்நிலையம் | : | **திரு. R. ராஜேஷ்குமார்,** வட்ட பொருளாளர் |
| தண்ணீர் பந்தல் பிரிவு | : | **திரு. C. அப்துல் நாசர்,** வட்ட இணைச் செயலாளர் |
| கவுண்டம்பாளையம் பிரிவு | : | **திரு. R. கணேசன்,** வட்ட செயல் தலைவர் |
| கணேஷ் நகர் பிரிவு | : | **திருமதி. L. எப்சிபா**<br>மத்திய அலுவலகம் & MRT கோட்ட செயலாளர் |
| 110/11 KV கவுண்டன் பாளையம் துணை மின்நிலையம் | : | **திரு. R. தண்டபாணி**<br>கோட்ட செயலாளர், நகரிய கோட்டம் |
| சங்கனூர் பிரிவு | : | **திரு. R. கணேசன்,** வட்ட செயல் தலைவர் |

## கோவை / தெற்கு வட்டத்தில் 9 இடங்களில் மே தின கொடி ஏற்றப்பட்டது

### சோமனூர் கோட்டம்

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. R. மகேஷ்குமார்**<br>மாநில இணைச் செயலாளர் வட்ட பொருளாளர் |
| முன்னிலை | : | **திரு. V. சீனிவாசன்,** கோட்டத் தலைவர் |
| கொடி ஏற்றுதல் | : | **திரு. S. உதயகுமார்,** கோட்ட செயலாளர் |
| மே தின சிறப்புரை | : | **திரு. A. கண்ணாதுரை,** மாநில உபதலைவர் |

### அரசூர் 230 KV SS

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. S. உதயகுமார்,** கோட்ட செயலாளர் |
| முன்னிலை | : | **திரு. R. ராஜா,** பிரதிநிதி |
| கொடியேற்றம் | : | **திரு. S. உன்னி கிருஷ்ணன்,** மூத்த உறுப்பினர் |

### அரசூர் உபகோட்டம் / பிரிவு அலுவலகம்

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. S. உதயகுமார்,** கோட்ட செயலாளர் |
| முன்னிலை | : | **திரு. C. பாஸ்கர்,** உதவி செயலாளர் |
| கொடியேற்றம் | : | **திரு. S. விக்னேஷ்குமார்,** உதவி செயலாளர் |

### நெகமம் கோட்டம்

### செயற்பொறியாளர் அலுவலகம், நெகமம்

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. A. ஜாகீர் உசேன்,** கோட்ட தலைவர் |
| கொடியேற்றம் | : | **திரு. A. செந்தில்குமார்,** கோட்ட செயலாளர் |

### கிணத்துகடவு பிரிவு

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. A. ஜாகீர் உசேன்,** கோட்ட தலைவர் |
| கொடியேற்றம் | : | **திரு. A. செந்தில்குமார்,** கோட்ட செயலாளர் |

### குனியமுத்தூர் கோட்டம்

| | | |
|---|---|---|
| செயற்பொறியாளர் அலுவலகம் | : | **திரு. R. திருப்பதி வெங்கடாசலம்,** கோட்ட தலைவர் |
| குறிச்சி SS | - | **திரு. P. பாலகிருஷ்ணன்,** கோட்ட செயலாளர் |
| மதுக்கரை SS | - | **திரு. K. சண்முகம்,** மூத்த உறுப்பினர் |
| ஒத்தக்கால் மண்டபம் SS | - | **திரு. மூர்த்தி,** உதவி செயலாளர் |

## UTUC - மேட்டுப்பாளையம்

**ரேஷன் கடை வளாகம், சுதந்திரபுரம்**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. R. சிவப்பிரகாஷ்,** வட்ட பொருளாளர், கோவை/வடக்கு |
| முன்னிலை | : | **திரு. G. ராஜேந்திரன்,** மாநிலத் தலைவர் ரேஷன் கடை பணியாளர்கள் சங்கம் |
| கொடியேற்றம் | : | **திரு. A. ராஜேந்திரன்,** வட்டத் தலைவர்/ கோவை/ வடக்கு மாநில இணைச் செயலாளர் |
| மே தின சிறப்புரை | : | **திரு. P. தினேஷ்குமார்,** மாநில பொதுச் செயலாளர் ரேஷன் கடை பணியாளர் சங்கம் |

**ரேஷன் கடை பணியாளர் சங்கம் கொடியேற்று நிகழ்வு**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. K. செல்வராஜ்,** மாவட்ட செயலாளர் |
| முன்னிலை | : | **திருமதி. மைதிலி,** மகளிரணி செயலாளர் (தொழிற்நுட்ப பிரிவு) |
| கொடியேற்றம் | : | **திரு. P. தினேஷ்குமார்,** மாநில பொதுச் செயலாளர் |
| சிறப்புரை | : | **திரு. G.. ராஜேந்திரன்,** மாநிலத் தலைவர் |

## கோவை - வடக்கு இணையில் 12 இடங்களில் மே தின கொடி ஏற்றப்பட்டது

**மேட்டுப்பாளையம் – கோட்டம்**

**செயற்பொறியாளர் அலுவலகம்**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. த. சிவப்பிரகாஷ்,** வட்ட பொருளாளர் |
| முன்னிலை | : | **திரு. N. சிவஇளங்கோ,** கோட்ட தலைவர் |
| கொடியேற்றம் | : | **திரு. A. ராஜேந்திரன்,** வட்டத் தலைவர் |

**உதவி செயற்பொறியாளர்/காரமடை :**

**திருமதி. R. யோகசித்ரா,** வட்ட இணைச் செயலாளர்

**உதவி செயற்பொறியாளர் அலுவலகம்/மேட்டுப்பாளையம்**

**திரு. P. பிரகாஷ்,** மாநில இணைச் செயலாளர்

**கரியாம்பாளையம் பிரிவு**

**திரு. N. சிவஇளங்கோ,** கோட்ட தலைவர்

**சீரநாயக்கன்பாளையம் – கோட்டம்**

**செயற்பொறியாளர் அலுவலகம் :**

| | | |
|---|---|---|
| தலைமை | : | **திரு. A. சரவணக்குமார்,** வட்ட உபதலைவர் |
| முன்னிலை | : | **திரு. S. கௌதம்,** கோட்ட தலைவர் |
| கொடியேற்றம் | : | **திரு. N. கனகராஜ்,** வட்ட செயல் தலைவர் |

**தொண்டாமுத்தூர் பிரிவு**

**திரு. A. சரவணக்குமார்,** வட்ட உபதலைவர்

**மாதம்பட்டி பிரிவு**

| | | |
|---|---|---|
| தலைமை | : | திரு. A. கணேசன், கோட்ட செயலாளர் |
| கொடியேற்றம் | : | திரு. பேச்சிமுத்து, ஆசிரியர் (ஓய்வு)<br>ஆலாந்துறை அரசு மேல்நிலைப்பள்ளி |


**ஆலாந்துறை/கிழக்கு பிரிவு**

திரு. S. கௌதம், கோட்ட தலைவர்

**கு. வடமதுரை - கோட்டம்**

| | | |
|---|---|---|
| செயற்பொறியாளர் அலுவலகம் | : | திரு. K. யோகேஷ்குமார், கோட்ட செயலாளர் |
| சரவணப்பட்டி SS | : | திரு. S. புவனேஸ்வரன், கோட்ட தலைவர் |
| சஹாரா SS | : | திரு. A. ராஜேந்திரன், வட்ட தலைவர் |
| MGC பாளையம் SS | : | திரு. R. சிவப்பிரகாஷ், வட்ட பொருளாளர் |

**வளர்ச்சி நிதி ரூ. 1000/-**



**திருமண நாள்: 30.03.1970**

**55வது திருமண வாழ்த்துகள் (30.03.2025)**

**திரு. C.G. பால் - புஷ்பலீலாபாய் தம்பதியர்**

# ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் UTUC

ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸின் மே தின கொடியேற்றம் திருவாரூர் சிவம் நகரில் மாவட்ட தலைவர் S. ராஜசேகர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் S. முருகஅருள் முன்னிலையில் நடைபெற்றது. இதில் ஐ.தொ.கா. உறுப்பினர்கள், பொருப்பாளர்கள் கலந்து கொண்டனர். மாவட்ட செயலாளர் R. குணசேகரன், பொருளாளர் S. பாலமுருகன் மே தின உரையாற்றினார்கள்.




விழா ஏற்பாடுகளை கூறியவர் நல பணியாளர் சங்க செயலாளர் கணேசன் சிறப்பாக செய்திருந்தனர். மே தின பேரணி ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸின் திருவாரூர் மாவட்ட மே தின பேரணி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் S. முருகஅருள் தலைமையில் திருவாரூர் பழைய இரயில்வே ஸ்டேஷனிலிருந்து தொடங்கியது.






மாவட்ட தலைவர் S. ராஜசேகர், மாவட்ட செயலாளர் R. குணசேகரன், பொருளாளர் S. பாலமுருகன், Employees Federation தலைவர் சிங்காரவேலன், செயலாளர், ராஜாராமன், மாநில குழு உறுப்பினர் கேசவன், பூந்தோட்டம் சிங்காரவேலன், ராஜகுமார், மோகன்ராஜ், ஆர். வெங்கடேசன், பூபாலன், மணிகண்டன், சந்துரு, பாலசந்தர் மற்றும் பலர் கலந்து கொண்டு நகரின் முக்கிய வீதிகள் வழியாக பேரணி நடைபெற்று திருவாரூர் புதிய பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது அங்கு நடைபெற்ற கூட்டத்தில் ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸின் தலைவர்கள் மேதின வாழ்த்துரையுடன் நிறைவு பெற்றது.





# திருவாரூர் மாவட்ட ஐக்கிய தொழிற்சங்க காங்கிரஸ் UTUC








திருவாரூர் மாவட்ட செயற்குழு கூட்டம் தலைவர் C. ராமதாஸ் அவர்களின் தலைமையில் திருவாரூர் தொழிற்சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக மாநில பொதுச்செயலாளர் திரு. அ. சேக்கிழார் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். மே தின கொடியேற்றம் பேரணி, இணைப்பு சங்கங்களின் வளர்ச்சி புதிய அமைப்புகளை UTUCயுடன் இணைத்தல் குறித்த ஆலோசனைகளை வழங்கினார்கள். இதில் UTUC மாநில ஒருங்கிணைப்பாளர் S. முருகஅருள், மாவட்டத் தலைவர் R. ராஜசேகர், மாவட்ட செயலாளர் R. குணசேகரன், மருந்து மொத்த விற்பனையாளர் சங்க செயலாளர் S. பாலமுருகன், மகளிர் அணி செயலாளர் T. வினோதினி, கோட்டத் தலைவர் சிங்கார வேலன், கோட்ட செயலாளர் ரா. ராஜாராமன், கார்த்திகேயன், ராஜ்குமார், விஜயராகவன் மற்றும் மாவட்ட கூரியர் பணியாளர் சங்க செயலாளர் கணேசன் உட்பட இணைப்பு சங்கங்களின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

## மே தின கொடியேற்றம்



திருவாரூர் வட்டம், திருவாரூர் கோட்டம், மேற்பார்வை பொறியாளர் அலுவலக வாயிலில் தலைவர் C. ராமதாஸ் அவர்களின் ஆணைப்படி திட்ட இணை செயலாளர் P. குமரசாமி அவர்கள் தலைமையில், திட்டச் செயலாளர் S. முருகஅருள் முன்னிலையில், திட்ட உபத்தலைவர் திரு. P. அண்ணாதுரை அவர்கள் மே தின கொடியை ஏற்றி வைத்தார் கோட்ட தலைவர் G. சிங்காரவேலன் கோட்டச் செயலாளர் ரா. ராஜாராமன் மற்றும் ராஜ்குமார், சிங்காரவேலு உட்பட பலர் மேதின வாழ்த்துரை வழங்கினார்கள். திருத்துறைப்பூண்டி நகர் பிரிவில் மாநிலக்குழு உறுப்பினர் எஸ். தம்புசாமி தலைமையில், திரு. அன்பு செல்வன், சந்திரசேகரன் உட்பட பலர் கலந்து கொண்டு பல்வேறு பிரிவுகளில் மே தின கொடியேற்றம் சிறப்பாக நடைபெற்றது. மன்னார்குடி கோட்டம் நகர் பிரிவில் திட்ட செயல்தலைவர் டி. ராஜகோபால் தலைமையில் அமைப்பு செயலாளர் எஸ். ஜெயபால் கொடியேற்றி வைத்தார். இதில் கோட்டத்தலைவர் கே. ராஜேந்திரன் கோட்ட செயலாளர் ஜி. கரிகாலன், பொருளாளர் வெங்கடேசன், ஏசுராஜன் ஆகியோர் மே தின உரை ஆற்றினர்.

## சிவகங்கை KRK. சுப்ரமணியம் | பணி ஓய்வு பாராட்டு

வாரிய பணியில் 1988 முதல் 37 ஆண்டு கால அனுபவம் அருமை!

தான் சார்ந்த சங்கத்திலும் ஆளுமை!

முடிவெடுப்பதில் புதுமை

வாழ்வில் என்றும் எளிமை

அனுபவ அறிவு அருமை




போற்றப்படுகிறது உமது திறமை

உம்மால் சங்கத்திற்கு என்றும் பெருமை

பழகுவதில் எளிமை

மேடைப் பேச்சில் திறமை

காலத்தினால் முதுமை

ஓய்வு பெற்றாலும் வேண்டாம் தனிமை

ஓய்வு காலத்திலும் தொடரட்டும் வளமை

என்றும் புரியும் உமது அருமை

தொழிற்சங்க பணியில் தொடரட்டும் உமது பங்கு!

தொழிற்சங்க பணி போல் அரசியலிலும் தொடரட்டும் உமது தொண்டு!

ஓய்வு காலம் சிறக்க

ஆரோக்யம் தொடர

வாழ்க வளத்துடன்

வளர்க மங்கா புகழுடன்

என்றும் மலர்வீர் இன்றுபோல் நீங்கா

புன்னகையுடன்...

- **கமுதி கோகுல்** B.E., M.Tech
AE/Spl./NKT
மாநில செயலாளர், TNPEO / சிவகங்கை

## நான்மணிக்கடிகை பாடல். 34 தமிழறிஞர் வை.வேதரெத்தினம் உரை!

### பாடல் (34) பிணியன்னர் பின் நோக்காப் பெண்டிர்!

**பிணியன்னர் பின் நோக்காப் பெண்டிர் உலகிற்கு**
**அணியன்னர் அன்புடை மாக்கள் - பிணிபயிரின்**
**புல்லன்னர் புல்லறிவின் ஆடவர் - கல்லன்னர்**
**வல்லென்ற நெஞ்சத் தவர்.**

**கருத்துரை**

வரவுக்கு மேல் செலவு செய்து தன் குடும்பத்தின் எதிர்காலத்தைப் பற்றிக் கருதிப் பார்க்காத மனைவி, கணவனுக்கு நோய்க்கு ஒப்பானவள்!

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்தி அவற்றை நேசிக்கும் நன்மக்கள் இந்த உலகத்திற்கு மதிப்பு மிக்க அணிகலனுக்கு ஒப்பாவர்!

அறியாமை நிறைந்த ஆண்மக்கள், வளரும் பயிரினைச் சூழ்ந்து கொண்டு அவற்றின் வளர்ச்சியைத் தடுக்கும் களைகளுக்கு ஒப்பாவர்! அதுபோல், பரிவுணர்வு இல்லாத வன்மையான நெஞ்சத்தை உடையவர், இளக்கமற்ற கொடிய கல்லுக்கு ஒப்பாவர்!

**அருஞ்சொற்பொருள்:**

பின் = பின் வருவது பற்றி; நோக்காப் பெண்டிர் = கருதிப் பார்க்காத மனைவி; பிணி அன்னர் = அவள் கணவனுக்கு நோய்க்கு ஒப்பாவாள்; அன்பு உடை மாக்கள் = எல்லா உயிர்களிடத்திலும் அன்புடைய நன்மக்கள்; உலகிற்கு = உலகத்திற்கு; அணி அன்னர் = அணிகலனுக்கு ஒப்பானவர்; புல் அறிவின் = சிற்றறிவுடைய; ஆடவர் = ஆண்மக்கள்; பயிரின் = வளரும் பயிரினைச் சூழ்ந்த; பிணி புல் அன்னர் = வளர்ச்சியைத் தடுக்கும் களைப் புல்லுக்கு ஒப்பானவர்; வல் என்ற = வன்மையான; நெஞ்சத்தவர் = நெஞ்சத்தை உடையவர்; கல் அன்னர் = கல்லுக்கு ஒப்பாவார்.

**சந்தாதாரர்கள் - உறுப்பினர்கள் மற்றும் நிர்வாகிகள் கவனத்திற்கு**

நமது சங்க இதழான **''எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்''**-ல் தங்களது கருத்துகள், கட்டுரைகள், தங்கள் வட்டத்திற்குட்பட்ட தொழிலாளர்கள் மற்றும் சங்கத்திற்கான செய்திகளை கீழ்க் கண்ட முகவரிக்கு அனுப்பி வைத்திடுவீர்!

**நிர்வாக ஆசிரியர்,**
**TNEB எம்ப்ளாயீஸ் பெடரேஷன் நியூஸ்**
39/101, சிங்கண்ணா தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை - 600 002.
**✆ : 9841446621 ✆: 8939152361**
**tnebemployeesfederation3600@gmail.com**

***குறிப்பு :*** *செய்திகள் வெளியிடுவது ஆசிரியக் குழுவின் முடிவிற்குட்பட்டது.*

# எதிர்மறை எண்ணங்களை எப்படி கையாள்வது?



சிவநாச்சியார்

''எதை நீ எண்ணுகிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை படைத்தவன் என்று எண்ணும் போது வலிமை படைத்தவன் ஆகிறாய்'' சுவாமி விவேகானந்தர் அவர்களின் சிந்தனை.

மனதை எதிர் துருவத்தில் நினைக்கும் பொழுது negative நாம் எந்த எண்ணங்களைக் கொண்டோமோ! அதே எண்ணங்களைச் சார்ந்த சம்பவம் நம் வாழ்வில் நிகழும் என்பது உண்மை. நம்மிலிருந்து எழுந்த எண்ணம் மோதுதல், பிரதிபலித்தல், சிதறுதல், ஊடுருவுதல், இரண்டிற்குமிடையே உலாவுதல் என்ற வகையில் செயல்பட்டு கொண்டுள்ளது.

''கெட்டதை நினைத்தால் கெட்டது தான் வந்து சேரும்''. ''நல்லது நினைத்தால் நல்லது தான் வந்து சேரும்''. நம்மிடமிருந்து புறப்பட்ட எண்ணங்கள் பிறரின் மீது முதலில் மோதுகிறது பிரதி பலிக்கிறது சிதறுகிறது. பின்னர் இருவருக்கும் இடையே உலாவிக்க கொண்டே உள்ளது. உதாரணமாக ஒருவரை நினைத்தாலே கோபம் வருகிறது. நாம் நினைக்கும் எண்ணம் அவர் மீது மோதி பிறகு நம்மிடையே பிரதிபலித்து சிதறும். பின் இருவருக்குமிடையே பகை என்ற உணர்வு இருந்து கொண்டே இருக்கும்.

ஆனால் எவரிடத்தில் இருந்து அந்த எண்ணம் புறப்பட்டதோ அந்த நபரை அந்த எண்ணம் நிச்சயம் தாக்கியே தீரும்.

ஒருவன் தன் வாழ்வில் கெட்டுப்போவதற்கும், சிறப்பாக வாழ்வதற்கும் எண்ணம் தான் காரணம் என்பதை மறக்க வேண்டாம்.

ஒரு வேலையை செயலை தொடங்கும் முன்பே அது அப்படி ஆகிடுமோ!! இப்படி ஆகிடுமோ!! என்று பயமும், பதட்டமும் வரத்தான் செய்கிறது. எதிர்மறை எண்ணங்களுக்கு அடிப்படை காரணம் பயமும், பதட்டமும் தான். பொதுவாக நாம் யோசித்துப் பார்த்தால் நாம் செய்யும் வேலை நமக்கு பிடித்ததாக இருந்தால் அங்கு பயமும் பதட்டமோ எதிர்மறை சிந்தனைக்கே வழியில்லை. நாம் செய்யும் வேலை அல்லது செயல் நமக்கு பிடித்ததாகவும் முழு ஈடுபாட்டுடன் செய்யும்போது அந்த வேலையின் முடிவு அல்லது அந்த செயல் நிச்சயம் வெற்றியில் முடியும்.

அதே போல் ஒரு வேலையை தொடங்குவதற்கு முன் அதன் சாதக பாதக நிலையினை யோசித்து பார்த்து செய்ய தொடங்குவோம். ஆனால் பெரும்பாலும் சாதக நிலையை யோசிப்பதில்லை பாதக நிலையை நிலையை தான் அதிகம் யோசித்துக் கொண்டிருக்கிறோம். வேலை எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம் ஆனால் அதில் முழு ஈடுபாட்டுடன் செய்யும்போது வெற்றி நிச்சயம்.

பெரும்பாலும் மற்றவர்களை குறை கூறுபவர்கள் தான் எதிர்மறை சிந்தனை உடையவர்களாக இருப்பார்கள்.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போலத்தான் நேர்மறை , எதிர்மறை எண்ணங்கள் உள்ளன.

பாத்ரூமில் வழுக்கி விழுந்தவன் இறந்தவனும் உண்டு. பாம்பு கடித்து உயிரோடு திரும்பி வந்தவனும் உண்டு. காரணம் பாத்ரூமில் விழுந்தவர் நாம் இறந்துவிடுவோமோ என்ற எதிர்மறை எண்ணமே அவரை பாதி கொன்றுவிடுகிறது.

நல்லதோ, கெட்டதோ எதுவாக இருந்தாலும் மனதில் உறுதி வேண்டும். நல்ல எண்ணங்கள் நல்லவற்றையே செய்துவிட்டு போகும் எண்ணியவருக்கு.

ஒருவரின் மனதில் எதிர்மறை எண்ணங்களே வராமல் இருக்க முடியுமா? என்றால் முடியாது தான்!! மனிதன் உயிரோடு இருக்க காரணமே எண்ணங்கள். அவற்றை கையாள தெரிந்து இருக்க வேண்டும். சும்மா இருப்பதே சுகம் என்று கேள்விப்பட்டிருப்போம். அவ்வாறு மனதை ஒரு சிறிது நேரம் தியான நிலையில் அமர்ந்து கவனித்து பாருங்கள் எத்தனை ஆயிரமாயிரம் எண்ணங்கள் வந்து வந்த போகும். எப்போவோ படித்தது, யாருடனோ பேசியது, சிறு வயதில் விளையாடியது, நேற்று நடந்தது, அக்கணம் நடந்தது, வீட்டில் உள்ளவர்களிடம் சண்டை போட்டது, குழந்தைகளை கொஞ்சியது. இப்படி எண்ணங்கள் முன்னர் பின்னர் நடந்ததையெல்லாம் எடுத்து காட்டும் கண்ணாடி.

நாம் அவற்றில் நடந்தவற்றை ஒன்றுமே செய்ய முடியாது. இனி மாற்றம் செய்ய ஏதுமில்லை. ஆனால் இனி நடக்க போவதை நம்மால் நிச்சயமாக மாற்றம் நிகழ வைக்க முடியும்.

உதாரணமாக குரு ஒருவர் தனது நான்கு சீடர்களுக்கும் ஒரு தேர்வு நடத்துகிறார். அதற்காக ஒரு பானையை தேர்ந்தெடுக்கிறார். ''அந்த பானையில் என்ன உள்ளது ?'' என பார்த்து வரச் சொல்லி ஒரு ஒரு சீடரையும் தனித்தனியாக அனுப்பி வைக்கிறார்.

அவ்வாறு ஒரு ஒரு சீடரும் தனித்தனியாக பார்த்து வந்து, ''அந்தப் பானையில் ஒன்றுமில்லை குருவே'' என்று சொல்கின்றனர். ஆனால் கடைசியாக உள்ள ஒரு சீடர் மட்டும் ''அந்தப் பானையில் காற்று உள்ளது குருவே'' என்று கூறுகிறார்.

அப்பொழுது குரு கேட்கிறார், ''அந்தப் பானையில் உள்ள காற்றை வெளியேற்ற என்ன செய்ய வேண்டும்'' என்று குரு கேட்கிறார். ஒரு ஒரு சீடரும் ''பானையில் உள்ள காற்றை வெளியேற்ற முடியாது'' என்றே சொல்கின்றனர்.

ஆனால் ஒரு சீடர் மட்டும் அந்த பானையை எடுத்துக் கொண்டு போய் அருகில் உள்ள குளத்தில் உள்ள நீரால் நிரப்புகிறார். இப்பொழுது குருவிடம் சொல்கிறார், ''அந்த பானையில் உள்ள காற்று முழுவதும் வெளியேறிவிட்டது குருவே'' என்கிறார். எதிர்மறை எண்ணங்கள் காற்று. நேர்மறை எண்ணங்கள் நீர். எதிர்மறை எண்ணங்கள் எனும் காற்று வெளியேற்ற நேர்மறை எண்ணங்கள் என்னும் நீரால் நிரப்பும் பொழுது அவை முழுதும் வெளியே விடுகிறது.

**''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**
**திண்ணிய ராகப் பெரின்''**

குறளின் நெறி ஒரு செயலை எண்ணியவர் செயலில் உறுதி கொண்டவராக இருந்தால் அவர் நினைத்த செயலை நினைத்தபடியே செய்து முடிக்கலாம். எண்ணங்கள் வான் நோக்கிய உயர்ந்த எண் ணங்களாக மலரும் போது நம் வாழ்வும் வானளவு உயர்ந்து செல்வதை உணர முடியும். எண்ணங்களின் துணைக் கொண்டு நாம் இலட்சியத்தில் சிறிதும் மனம் தளராது உறுதி கொண்டு செயல் பட்டால் வெற்றி நிச்சயம்.

☐

## பணியிலிருப்பவர்களுக்கு 2% அகவிலைப்படி உயர்வு - வாரிய உத்தரவு

**(சுருக்கம்)**

படிகள் - அகவிலைப்படி - தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு 01.01.2025 முதற்கொண்டு உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் - ஆணை - வெளியிடப்படுகிறது.

---

**(செயலகக் கிளை)**

**(நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 16, நாள்: 06.05.2025.**

சித்திரை - 25-ம் நாள்,
விசுவாவசு வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2056

படிக்கப்பட்டது:

1. (நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 04 (செ.கி, நாள்: 26.10.2024.
2. அரசாணை (நிலை) எண். 95, நிதி (படிகள்) துறை, நாள்: 28.04.2025.

★★★

**செயல்முறைகள்:**

பார்வை ஒன்றில் படிக்கப்பட்டுள்ள தமிழ்நா மின் பகிர்மான கழக செயல்முறை ஆணையில் வாரியத்தின் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட அகவிலைப்படி கீழ்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2024 | அடிப்படை ஊதியத்தில் 53 சதவீதம் |

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு ஆணையில், 01.01.2025 முதற்கொண்டு மாநில அரசு பணியாளர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2025 | அடிப்படை ஊதியத்தில் 55 சதவீதம் |

மேற்படி உயர்த்தப்பட்ட அகவிலைப்படி 01.01.2025 முதற்கொண்டு வழங்கப்படும் என்றும், ஜனவரி, 2025 முதல் ஏப்ரல் 2025 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது.

3. தமிழ்நாடு மின் பகிர்மான கழகமானது, தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையினைப் பின்பற்றி, தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், தமிழ்நாடு மின் உற்பத்தி கழகம், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகம் மற்றும் தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழக பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | அகவிலைப்படி வீதம் (மாதத்திற்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2025 | அடிப்படை ஊதியத்தில் 55 சதவீதம் |

மேலும், ஜனவரி 2025 முதல் ஏப்ரல் 2025 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை (ECS) மூலம் வழங்கப்படும்.

4. அனுமதிக்கத்தக்க உயர்த்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிட அடிப்படை ஊதியத்துடன் தனிப்பட்ட ஊதியத்தையும் (Personal Pay) சேர்த்துக் கொள்ள வேண்டும். திருத்தத்தட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அதாவது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின், அதனை அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அதனைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை.

5. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழுநேர பணியாளர்களுக்கும், அலுவலர்களுக்கும் மற்றும் திருத்தப்பட்ட ஊதிய விகிதம் ரூ. 4100-12500 பெறும் பணியாளர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும்.

**(வாரியத்தின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்**
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்

## ஓய்வூதியர்களுக்கு 2% அகவிலைப்படி உயர்வு - வாரிய உத்தரவு

**(சுருக்கம்)**

ஓய்வூதியம் - தமிழ்நாடு மின் பகிர்மானக் கழக ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படி 01.01.2025 முதல் உயர்த்தப்பட்ட வீதத்தில் அனுமதித்தல் - ஆணைகள் - வெளியிடப்படுகின்றன.

---

**(செயலகக் கிளை)**

**(நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 16, நாள்: 08.05.2025.**

சித்திரை - 25-ம் நாள்,
விசுவாவசு வருடம்
திருவள்ளுவர் ஆண்டு 2056

படிக்கப்பட்டது:

1. (நிலை) முழு வாரிய தமிழ்நாடு மின் பகிர்மான கழக செயல்முறை ஆணை எண். 04 (செ.கி, நாள்: 26.10.2024.

2. அரசாணை (நிலை) எண். 95, நிதி (படிகள்) துறை, நாள்: 28.04.2025.

★★★

**செயல்முறைகள்:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில், தமிழ்நாடு மின் பகிர்மானக் கழக ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கீழ்கண்டவாறு அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2024 | அடிப்படை ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்தில் 53 சதவீதம் |

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமிழ்நாடு அரசு ஆணையில், 01.01.2025 முதற்கொண்டு மாநில அரசு ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு கீழ்கண்ட திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | 01.07.2025 | அடிப்படை ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்தில் 55 சதவீதம் |

3. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகமானது, தமிழ்நாடு அரசின் மேற்காணும் ஆணையினைப் பின்பற்றி, தமிழ்நாடு மின்பகிர்மான கழக, ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அகவிலைப்படியைக் கீழ்கண்டவாறு உயர்த்தி வழங்கிட ஆணையிடுகிறது:-

| வ.எண். | எந்த நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | 01.01.2025 | அடிப்படை ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்தில் 55 சதவீதம் |

4. ஜனவரி 2025 முதல் ஏப்ரல் 2025 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் மே 2025-ஆம் மாத ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்துடன் வழங்கப்படும். திருத்தப்பட்ட அகவிலைப்படியைக் கணக்கிடுகையில், ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயைக் கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

5. தற்போதைய மற்றும் எதிர்கால குடும்ப ஓய்வூதியர்கள்: பகிர்வு முறையில் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில் அகவிலைப்படி விகிதாச்சாரத்திற்கிணங்க பிரிக்கப்படலாம்.

**(வாரியத்தின் ஆணைப்படி)**

**ஜெ. ராதாகிருஷ்ணன்**

தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர்